# கூடலூர் நகராட்சி (நீலகிரி)

அனுப்புநர்
திரு.வீ.பாஸ்கரன்.எம்.ஏ.,
ஆணையாளர்,
கூடலூர் நகராட்சி,
நீலகிரி மாவட்டம்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம்,
குமாரானந்தபுரம்,
திருப்பூர்–02

ந.க.எண்.**1852**/2021/சி1 நாள் 09–03–2021.

அய்யா,

பொருள்:- நகர்மன்ற கூட்டம் – கூடலூர் நகராட்சி (நீலகிரி) – பிப்ரவரி 2021 ம் ஆண்டின் இந்நகராட்சியில் நடைபெற்ற நகர்மன்றக் கூட்டம் – நகல் சமர்பித்தல் – தொடர்பாக.

பார்வை :- நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1087/2016/அ3 நாள் 23.02.2021

==========

பார்வையில் கண்டுள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடித குறிப்பிற்கிணங்க கூடலூர் நகராட்சியில் பிப்ரவரி 2021 ம் ஆண்டில் இந்நகராட்சியில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்டத்தின் நகல் 2 பிரதிகளில் இத்துடன் இணைத்து அனுப்பபட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இணைப்பு – நகர்மன்ற கூட்ட நகல்.

ஆணையாளர்
கூடலூர் நகராட்சி (நீலகிரி)

9.3.21

CLTER 2021

கூடலூர் நகராட்சி(நீலகிரி)

26.02.2021ம் தேதி வெள்ளி கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகராட்சியின் நகர்மன்ற சாதாரன கூட்டத்தின் பொருட்கள்

தலைமை– திரு.வீ.பாஸ்கரன்.எம்.ஏ., தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்

1) இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் பிப்ரவரி 2021–ம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்காக வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:– பதிவு செய்யலாம்

2) இந்நகராட்சியின் பொதுபிரிவு, பொறியியல் பிரிவு, குடிநீர் பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவு, வருவாய் பிரிவு ஆகிய பிரிவுகளில் பணிபுரியும் பணியாளர்களின் நிரந்தர வருங்கால வைப்பு நிதி (சேமநல நிதி) 1986 முதல் 2021 வரை உள்ள 17 ஆண்டுகள் வட்டி கணக்கீடு செய்து முன் மொழிவு தயாரித்து வழங்க சிந்தியா சாப்ட்வேர் நிறுவனத்தின் மூலம் விலைப்புள்ளி கோரி பணியினை ஒப்படைத்து முன் மொழிவு தயாரித்து வழங்க தோராய செலவினம் ரூ.100000/– ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1986 முதல் 2021 வரையுள்ள ஆண்டுகளுக்கு சிந்தியா சாப்ட்வேர் நிறுவனத்தார் மூலம் வட்டி கணக்கீடு செய்து அரசுக்கு முன் மொழிவு அனுப்பவும் அதற்கான செலவுத் தொகைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) இந்நகராட்சி பொசுகாதாரப் பிரிவிற்கு தேவையான Lemon Gross Oil 200 லிட்டர் மற்றும் Herbosol கிருமி நாசினி திரவியம் 200 லிட்டர் வாங்குவதற்காகவும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு –1) அனுமதி வழங்கலாம்

2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் ஏற்கலாம்.

4) இந்நகராட்சிக்குட்பட்ட தெருவிளக்கு இல்லாத சுமார் 25 இடங்களில் புதிய தெருவிளக்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டு மின்வாரியத்திற்கு இணைய தளத்தில் விண்ணப்பங்கள் பதிவிரக்கம் செய்யப்பட்டது. அதில் விண்ணப்பங்களுக்கான பதிவு கட்டணம் மற்றும் மேம்பாட்டு தொகையினை முதலில் செலுத்தாமலேயே அவ்விண்ணப்பங்களுக்கான மதிப்பீடுகள் தயார் செய்ய இயலும் என்பதால் விண்ணப்ப பதிவு மற்றும் மேம்பாட்டு தொகை ரூ.45875/–னை மின் வாரியத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதி வழங்கலாம்.

5) இந்நகராட்சியின் பொறியியல் பிரிவு பணிபுரிந்து வரும் திரு.L.முத்துகுமார் குடிநீர் தேக்க தொட்டி உதவியாளர் தனக்கு மின்பணியாளர் ஆக பதவி உயர்வு வேண்டி சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.16405/2020 எண்ணிட்ட வழக்கு தொடர்ந்துள்ளதால் இந்நகராட்சி வழக்கறிஞராக திரு.P.ஸ்ரீனிவாசன் சென்னை உயர் நீதிமன்ற அரசு வழக்கறிஞர் மூலம் மேற்கண்ட வழக்கிற்கு நகராட்சியின் எதிர்வழக்காடவும் அதற்கான செலவினங்களை ஏற்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு.P.ஸ்ரீனிவாசன் அவர்கள் மூலமாக W.P.No.16405/2020 வழக்கினை எதிர் வழக்காடவும் அதற்கான செலவினங்களை ஏற்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

6) இந்நகராட்சி வருவாய் பிரிவில் வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வந்த திரு.A.காதர்பாட்சா கான் என்பவர் குற்றம் மற்றும் ஊழல் தடுப்பு துறைமூலமாக கையூட்டு பெற்றமைக்கு தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு இந்நகராட்சி மூலமாக பிழைப்பூதியம் பெற்று வருகிறார். இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்றத்தில் தனது குடும்ப சூழ்நிலையினை கருத்தில் கொண்டு தனக்கு மீண்டும் பணி வழங்க W.P.No.3045/2020 ல் வழக்கு தொடர்ந்துள்ளார். இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.ஸ்ரீனிவாசன் அவர்கள் மூலமாக மேற்கண்ட வழக்கினை நகராட்சி சார்பில் எதிர் வழக்காடவும் அதற்கான செலவினங்களை ஏற்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு.P.ஸ்ரீனிவாசன் அவர்கள் மூலமாக W.P.No.3045/2020 வழக்கினை எதிர் வழக்காடவும் அதற்கான செலவினங்களை ஏற்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

7) இந்நகராட்சியில் உள்ளூரில் தொடரப்படும் வழக்குகள் (நீலகிரி மாவட்டம்) அதிக அளவில் தேக்க நிலையில் இருந்ததாலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அறிவுரை வழங்கப்பட்டதை தொடர்ந்து இந்நகராட்சியின் நிர்வாக நலன் கருதி கூடலூர் நீதிமன்றத்தில் உள்ள பார் கவுன்சில் வாயிலாக பெறப்பட்ட 17.02.2021 அன்று வழக்கறிஞருடன்நேர் காணல் செய்யப்பட்டதில் திரு.சுபின் என்பவரை சட்ட ஆலோசகராக நியமித்து கொள்ள முடிவு செய்யப்பட்டது. எனவே மேற்படி வழக்கறிஞரை இந்நகராட்சி சட்ட ஆலோசகராக நியமித்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –திரு.சுபின்** வழக்கறிஞரை இந்நகராட்சி சட்ட ஆலோசகராக பிப்ரவரி 2021 முதல் நியமனம் செய்து உத்திரவு வழங்கவும் மேற்படி வழக்கறிஞருக்கான செலவு கட்டணத்திற்கும் நகராட்சி அவ்வப்போது பிறப்பிக்கும் விதுமறைகளுக்குட்பட்டும் வழக்கறிஞர் நியமனம் செய்யப்பட்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

8) இந்நகராட்சி பகுதியிலுள்ள முதியோர், விதவை, முதிர்கண்ணி, மாற்றுதிறனாளி மற்றும் DDWP ஆகிய உதவி தொகைகளை பெறுவதற்கு பயனாளிகள் விண்ணப்பித்திருந்தனர். அவர்களின் பெயர் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பட்டியலில் இடம் பெறவில்லை. எனவே இதன் விபரம் வட்டாட்சியருக்கு தெரிவிக்கப்பட்டு வட்டாட்சியர்அவர்கள் 19.11.2020 மற்றும் 29.12.2020 ஆகிய தேதிகளில் 2 விண்ணபங்களுக்கு வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டு அதற்கான சான்று வழங்க கேட்டுள்ளார். எனவே கீழ்கண்டவாறு உள்ள பயனாளிகளை வறுமை கோட்டிற்கு கீழ் கொண்டு வர மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1) செல்வி.ஜான்சி, த/பெ.ஜோசப்,14/111, அத்திபாளி, கூடலூர் – மாற்றுத்திறனாளி
2) திரு.மூர்த்தி,த/பெ.புட்டுசாமி,1/535,ஒ.வி .எச் சாலை, மேல் கூடலூர் – மாற்றுத்திறனாளி

**அலுவலக** குறிப்பு – பெறப்பட்ட 2 விண்ணபங்களும் மாற்றுதிறனாளியாக உள்ளதால் வட்டாட்சியரின் பரிந்துரைப்படியும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர் பட்டியலில் இண்ணத்து சான்று வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

9) இந்நகராட்சியின் திருவள்ளுவர் வணிக வளாகக் கடை எண் 1,2,3,23 மற்றும் 24 ஆகிய கடைகளுக்கு செய்திதாளில் விளம்பரம் செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் பொது ஏலத்தில் ஒருவரும் ஏலம் கோர முன்வரவில்லை. மேலும் இரு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ் கண்டவாறு பெறப்பட்டுள்ளது பின் வருமாறு.(கடை எண்.23)

| வ.எண் | பெயர் மற்றும் விலாசம் | உச்ச ஏல கேள்வித்தொகை |
|---|---|---|
| 1) | திரு.ராஜேஷ், 12/984 D4,முதல் மைல், கூடலூர் | ரூ.3700/– |
| 2) | திரு.உசைன் 1/993 C,முதல் மைல், கூடலூர் | ரூ.3500/– |

வரிசை எண் 1 ல் கண்ட திரு.ராஜேஷ்,என்பவர் மாத வாடகை ரூ.3700/–க்கு கோரியுள்ளதை மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

**அலுவலக** குறிப்பு – மேற்காணும் கடை பழைய வாடகை தொகை அதிகமாக உள்ளதாலும் தற்பொழுது உள்ள வாடனை குறைவாக உள்ளது. மேலும் கொரோணா காரணமாக பழைய கடை உரிமைதாரர் வாடகை தொகை செலுத்தாது நிலுவையில் இருந்த வந்த நிலையிலும் உள்குத்தகைக்கு விட்டு வாடகை செலுத்தாமல் நிலுவையில் இருந்த நிலையில் மறு ஏலம் கொண்டுவரப்பட்டு ஏலம் கோரப்பட்டதில் திரு.ராஜேஷ் என்பவர் ரூ.3700/– க்கு ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ளார். எனவே கடை காலியாக இருப்பின் நிதி நிலை பின் தங்கும் நிலையில் நிர்வாக நலன் கருதி மேற்கண்ட கடையை திரு.ராஜேஷ் என்பவருக்கு ஒப்படைப்பு செய்யவும் மேலும் பழைய கடை உரிமைதாரரிடம் வைப்பு தொகை சரிகட்டிக்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

10) இந்நகராட்சியின் மீன் கடை வணிக வளாகக் கடை எண் 1,2,4,5,7,8,18 மற்றும் 23 ஆகிய கடைகளுக்கு செய்திதாளில் விளம்பரம் செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் பொது ஏலத்தில் ஒருவரும் ஏலம் கோர முன்வரவில்லை. மேலும் இரு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ் கண்டவாறு பெறப்பட்டுள்ளது பின் வருமாறு.

| வ.எண் | பெயர் மற்றும் விலாசம் | உச்ச ஏல கேள்வித்தொகை |
|---|---|---|
| 1) | திரு.உசைன்<br>1/993 C,முதல் மைல், கூடலூார் | ரூ.3700/– |
| 2) | திரு.ராஜேஷ்,<br>12/984 D4.முதல் மைல், கூடலூார் | ரூ.3400/– |

வரிசை எண் 1 ல் கண்ட திரு. உசைன் என்பவர் மாத வாடகை ரூ.3700/–க்கு கோரியுள்ளதை மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மேற்காணும் கடை உரிமைதாரர் வாடகை தொகை செலுத்தாமல் நிலுவை இருந்த நிலையிலும், 3/2020 மாதம் முதல் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக கடை உரிமைதாரர் தொகை செலுத்தாத நிலையில் கடையை இந்நகராட்சி மூலம் பூட்டி சீல் வைக்கப்பட்டது. இந்நிலையில் பழைய கடை உரிமைதாரருக்கு பலமுறை கடை நிலுவைத் தொகையை செலுத்த அறிவுறுத்தியும் அவர் மறுத்து வந்த நிலையில் ஏலம் கொண்டு வரப்பட்டது. எனவே ஏலத்தில் திரு.உசைன் என்பவர் மாத வாடகை ரூ.3700/–க்கு ஒப்பந்தபுள்ளி வழங்கி உள்ளார். இது பழைய வாடகையை விட கூடுதலாக இருப்பதால் இதனை மன்றம் அனுமதிக்கலாம்.

11) இந்நகராட்சியின் திருவள்ளுவர் வணிக வளாகக் கடை எண் 1,2,3,23 மற்றும் 24 ஆகிய கடைகளுக்கு செய்திதாளில் விளம்பரம் செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் பொது ஏலத்தில் ஒருவரும் ஏலம் கோர முன்வரவில்லை. மேலும் இரு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ் கண்டவாறு பெறப்பட்டுள்ளது பின் வருமாறு. (கடை எண்.24)

| வ.எண் | பெயர் மற்றும் விலாசம் | உச்ச ஏல கேள்வித்தொகை |
|---|---|---|
| 1) | திரு.ராஜேஷ்,<br>12/984 D4,முதல் மைல், கூடலூார் | ரூ.3500/– |
| 2) | திரு.உசைன்<br>1/993 C,முதல் மைல், கூடலூார் | ரூ.3700/– |

வரிசை எண் 1 ல் கண்ட திரு. உசைன் என்பவர் மாத வாடகை ரூ.3700/–க்கு கோரியுள்ளதை மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மேற்காணும் கடை உரிமைதாரர் வாடகை தொகை செலுத்தாமல் நிலுவை இருந்த நிலையிலும், 3/2020 மாதம் முதல் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக கடை உரிமைதாரர் தொகை செலுத்தாத நிலையிலும் பழைய வாடகை பாக்கி நிலுவை இருந்ததாலும் கடையை இந்நகராட்சி மூலம் பூட்டி சீல் வைக்கப்பட்டது. இந்நிலையில் பழைய கடை உரிமைதாரருக்கு பலமுறை கடை நிலுவைத் தொகையை செலுத்த அறிவுறுத்தியும் அவர் மறுத்து வந்த நிலையில் ஏலம் கொண்டு வரப்பட்டது. எனவே ஏலத்தில் திரு.உசைன் என்பவர் மாத வாடகை ரூ.3700/–க்கு ஒப்பந்தபுள்ளி வழங்கி உள்ளார். இது பழைய வாடகையை விட கூடுதலாக இருப்பதால் மன்றம் அனுமதி வழங்கலாம்.

12) இந்நகராட்சியின் திருவள்ளுவர் வணிக வளாகக்கடை எண்1,2,3,9, 4,10,11,18 மற்றும் 19 மீன் கடை வணிக வளாகத்தில் உள்ள 1,2,4,5,7,8 மற்றும் 18 ஆகிய கடைகளுக்கு செய்திதாளில் விளம்பரம் செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் பொது ஏலத்தில் ஒருவரும் ஏலம்கோர முன்வரவில்லை. எனவே மறு ஏலம் கொண்டு வர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – சட்டமன்ற தேர்தல் முடிவுற்ற பின்பு பொது ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

13) இந்நகராட்சியின் கணிணி பிரிவில் வரி வசூல் மையத்தில் உள்ள நகல் எடுக்கும் இயந்திரத்தின் ரிப்பன் பழுது ஏற்பட்டு பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளதாலும் அதனை உள்ளூர் நிறுவனத்தில் Invoice பெற்று வாங்கி பொருத்திக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) உள்ளூர் நிறுவனங்களில் **Invoice** பெற்று வாங்கி கொள்ள அனுமதிக்கலாம்.

2) அதற்கான செலவினங்களுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்

14) இந்நகராட்சியில் நடைபெற்ற வளர்ச்சி பணிகள் குறித்து அறிக்கையை நகராட்சி ஆணையர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குந,திருப்பூர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு வளர்ச்சி பணிகள் குறித்து புகைப்படம் மற்றும் CD யில் பதிவு செய்தமைக்கு திருவாளர்.A.பாக்கியநாதன், பாக்கிய டிஜிட்டல் ஸ்டுடியோ அவர்களுக்கு கீழ்கண்டவாறு தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ எண் | மாதம் | தொகை |
|---|---|---|
| 1 | 05.06.2020 | ரூ.2730 |
| 2 | 03.07.2020 | ரூ.5020 |
| 3 | 10.01.2021 | ரூ.4500 |
| 4 | 02.02.2021 | ரூ.3320 |
| | மொத்தம் | ரூ.15570 |

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.

15) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு திட்டம் 2019–2020 ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தார்சாலை பணிகள் முடிவுற்றுள்ளதால் அச்சாலை பணிக்கு முதல்வர் அரசு தொழில் நுட்ப கல்லூரியிலிருந்து மூன்றாம் நபர் தர பரிசோதனை செய்வதற்கு செலவின தொகையான ரூ.1.00 இலட்சம் மற்றும் GST 18% ரூ.18000/– செலுத்த பட்டியல் இவ்வலுவலகத்திற்கு அனுப்பபட்டுள்ளதால் இத்தொகையினை மேற்கண்ட கல்லூரிக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்பபடுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.

16) இந்நகராட்சிக்கு சொந்தமான பாரதிதாசன் வணிக வளாகத்தில் அமைந்துள்ள கட்டண கழிப்பிடத்திற்கு 29.01.2021 அன்று நடந்த ஏலத்தில் திரு.R.செல்வபாரதி கலந்து கொண்டார். மேற்படி பொது ஏலம் கிடைக்காத காரணத்தினால் அவர் செலுத்திய வைப்பு தொகை மற்றும் முன் வைப்பு தொகை ரூ.50000/– திருப்பி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.

17) இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் TN 43 Y 0725 தேவையான ஹைட்ரோலிக் ஆயில் 30 லி திருவாளர்கள். ஸ்ரீனிவாசா சர்வீஸ் ஸ்டேஷன், கூடலூர் நிறுவனத்திலிருந்து வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.15000/– ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1) அனுமதி வழங்கலாம்

2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை ஏற்கலாம்.

18) இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் TN 43 X 1822 ன் தகுதி சான்று காலம் நிறைவு பெற்றமையால் வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்ய டாட்டா மோட்டார்ஸ் நிறுவன பணிமனையில் பழுது நீக்கம் செய்து தகுதி சான்று பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்

19) இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் TN 43 X 1830 ன் தகுதி சான்று காலம் நிறைவு பெற்றமையால் வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்ய டாட்டா மோட்டார்ஸ் நிறுவன பணிமனையில் பழுது நீக்கம் செய்து தகுதி சான்று பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்

20) இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் TN 43 X 1825 ன் தகுதி சான்று காலம் நிறைவு பெற்றமையால் வாகனத்திலுள்ள பழுதுகளை டாட்டா மோட்டார்ஸ் நிறுவன பணிமனையில் விலைப்புள்ளி பெற்று பழுது நீக்கம் செய்து தகுதி சான்று பெறுவதற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1) அனுமதி வழங்கலாம்
2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை ஏற்கலாம்.

21) இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் TN 43 Y 0393 ன் தகுதி சான்று காலம் நிறைவு பெற்றமையால் வாகனத்திலுள்ள பழுதுகளை நீக்கம் செய்து தகுதி சான்று பெறுவதற்கான உத்தேச செலவினம் ரூ.60000/–க்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1) அனுமதி வழங்கலாம்
2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை ஏற்கலாம்.

22) இந்நகர்மன்ற தீர்மானம் எண்.189 நாள் 30.09.2019ன் படி பொதுசுகாாரப் பிரிவில் திருவாளர்கள். அட்சயா அசோசியேட்ஸ் நிறுவனம் மூலம் 80 தூய்மை பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். ஒப்பந்த காலம் 31.10.2020 உடன் முடிவடைந்ததால் நகர்மன்ற தீர்மானம் எண்.613 நாள் 29.10.2020 மற்றும் தீர்மானம் எண்.654 நாள் 29.01.2021ன் படி இரு முறை பணி நீட்டிப்பு வழங்கப்பட்டது. புதிய ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக ந.க.எண்.2467/2020/எச்1 நாள் 25.09.2020 வாயிலாக கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் அனுமதி கிடைக்கப்பெறாத நிலையில் பொதுசுகாதார பணிகள் பாதிக்காத வண்ணம் பணியினை மேற்கொள்ள திருவாளர்கள். அட்சயா அசோசியேட்ஸ், நிறுவனதிதிற்கு 01.03.2021 முதல் 30.06.2021 மேலும் நான்கு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யவும் அதற்கான தோராய செலவினம். ரூ.70.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.

23) இந்நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாக கடைகளுக்கு மாத மாதம் செலுத்தப்படும் வாடகையின் 18% GST தொகையை வசூல் செய்த விவரத்துடன் GST அறிக்கையை தாயார் செய்து மாத மாதம் வணிக துறைக்கு பாரத மாநில வங்கி செலான் (Challan) மூலம் செலுத்தப்பட்டு வருகிறது. மேலும் இப்பணிகளை செய்வதற்குண்டான தணிக்கை தொகை (Audit Fees) தோராயமாக ரூ.50000/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதி வழங்கலாம்.

24) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 3,4,9,10,14,15,19,21 தொரப்பள்ளி,அத்திபாளி,இளங்கோ நகர், ஈட்டிமூலா,சளிவயல்,காரமூலா, குமரன் டுடோரியல் மற்றும் ஓம் சக்தி கோவில் ஆகிய பகுதிகளில் குடிநீர் குழாய் மாற்றி அமைக்க பொதுமக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.80 இலட்சத்திற்கு பொதுநிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதி வழங்கலாம்.

25) இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் 49 மின் பம்பு மோட்டார்களை இயக்குவதற்கு 2014–2015 ம் ஆண்டு முதல் பணியாற்றும் தினக்கூலி பணியாளர்களுக்கு உண்டான மாதாந்திர செலவின தொகை ரூ.49000/– ற்கு நகர்மன்ற தீர்மானம் எண் 427 நாள் 30.03.2020 ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதிக்கலாம் 31.03.2021 ல் முடிவடைந்தாலும் 2021–2022 ம் ஆண்டிற்கு குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள சந்திரசேகர், அஜந்தா கன்ஸ்ட்ரக்ஷன், கூடலூர் அவர்களுக்கு 2021–2022 ஆண்டில் மேற்கண்ட பணியினை செய்ய ஓராண்டு கால நீடிப்பு செய்து ஏப்ரல் 2021 முதல் மார்ச் 2022 ரூ.49000x12 மாத வீதம் ரூ.588000/–(ரூ ஐந்து லட்சத்து எண்பத்தி எட்டாயிரம் மட்டும்) செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.

26) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 8 பள்ளிப்படி பகுதியில் Reach - I தடுப்புச்சுவர் அமைக்க பொதுமக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு பொதுநிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதி வழங்கலாம்.

27) இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 14 ல் அமைந்துள்ள காளம்புழா நவீன் எரிவாயு தகன மேடையை சுற்றி தடுப்புச்சுவர் அமைக்க பொது மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு பொதுநிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதி வழங்கலாம்.

28) இந்நகராட்சிக்குட்பட்ட கல்குவாரி, கோழிப்பாலம் நம்பர்–1 மற்றும் 2 செம்பாலா, தட்டகொல்லி, தொரப்பள்ளி பள்ளிவாசல் ஆகிய பகுதிகளில் உள்ள பம்பு அறைக்கு எலக்டிரிக்கல் பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் நம்பர் 4 செக்டேம் மற்றும் ஹெல்லன் செக்டேம் தூர்வாரி குடிநீர் குழாய் மாற்றி அமைப்பதற்கு தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.6.60 இலட்சத்திற்கு குடிநீர் திட்ட பணியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதி வழங்கலாம்.

29) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 17 தொரப்பள்ளி குட்ஷெப்பேடு பம்பு அறைக்கு MS Ladder and 80 mm Dia and Electrical items புதியதாக மாற்ற தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.80 இலட்சத்திற்கு பொதுநிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதி வழங்கலாம்.

ஒம்/–
ஆணையாளர்(பி)
கூடலூர் நகராட்சி (நீலகிரி)

/உண்மை நகல்/

ஆணையாளர்
கூடலூர் நகராட்சி(நீலகிரி)

9.3.21